# உனக்கு சந்தோஷமும் மகிழ்ச்சியும் உண்டாகும். லூக் 1 : 14

இந்த மாதத்தை முடிக்கப் போகிறோமே ? எதிர்காலம் எப்படி இருக்குமோ என சிந்திக்கும், என் அன்பு சகோதரனே, சகோதரியே,

**உனக்கு சந்தோஷமும் மகிழ்ச்சியும் உண்டாகும்.**

எலிசபெத்து மலடியாயிருந்தாள். எனவே எலிசபெத்துக்கும் சகரியாவுக்கும் பிள்ளையில்லாதிருந்தது. இருவரும் வயது சென்றவர்களாயும் இருந்தார்கள். ஆனால், தேவன் தரும் ஆசீர்வாதங்களில் ஒன்று, **கர்ப்பம் விழுகிறதும், மலடும் உன் தேசத்தில் இருப்பதில்லை.** – என்பதாகும்.

ஆனால், எலிசபெத், சகரியாவின் வாழ்வில் மலடு காணப்பட்டது.

இன்றும் உங்கள் வாழ்வில் ஏதோ ஒரு மலட்டுத் தன்மை காணப்படுகிறது.

**ஆதி. 11 : 30 கூறுகிறது, :** சாராய்க்குப் பிள்ளை இல்லை. மலடியாயிருந்தாள்.

**ஆதி. 25 : 21 கூறுகிறது** மலடியாயிருந்த தன் மனைவிக்காக ஈசாக்கு கர்த்தரை நோக்கி வேண்டுதல் செய்தான்.

**ஆதி. 29 : 31 கூறுகிறது :** ராகேலோ மலடியாயிருந்தாள்.

**நியாதிபதி. 13 : 2 கூறுகிறது :** மனோவா மனைவி பிள்ளை பெறாத மலடியாயிருந்தாள்.

**1 சாமு. 1 : 2 கூறுகிறது :** அன்னாளுக்கோ பிள்ளை இல்லை.

– எங்கு பார்த்தாலும் 'மலடு' உன்னுடைய வாழ்க்கையிலும் எத்தனையோ விதம் விதமான 'மலடு' காணப்படுகிறதல்லவா ?

**கண் கலங்காதே,**

**ஏசா. 54 : 1 கூறுகிறது :** பிள்ளைபெறாத மலடியே, மகிழ்ந்துபாடு, கர்ப்பவேதனைப் படாதவளே, கெம்பீரமாய்ப்பாடி, ஆனந்த சத்தமிடு. வாழ்க்கைப்பட்டவளுடைய பிள்ளைகளைப் பார்க்கிலும் அநாத ஸ்தீரியினுடைய பிள்ளைகள் அதிகம் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

**சங்கீ. 113 : 9** : மலடியைச் சந்தோஷமான பிள்ளைதாய்ச்சியாக்கி, வீட்டிலே குடியிருக்கப் பண்ணுகிறார். அல்லேலூயா.

**மலடியே மகிழ்ந்து பாடு,**

**ஆதி. 21 : 1,2 கூறுகிறது :** கர்த்தர் தாம் சொல்லியிருந்தபடி சாராள்பேரில் கடாட்சமானார். கர்த்தர் தாம் உரைத்தபடியே சாராளுக்கு செய்தருளினார். ஆபிரகாம் முதிர் வயதாயிருக்கையில் சாராள் கர்ப்பவதியாகி, தேவன் குறித்திருந்தகாலத்திலே அவனுக்கு ஒரு குமாரனைப் பெற்றாள்.

**ஆதி. 25 : 21** : கர்த்தர் ஈசாக்கின் வேண்டுதலைக் கேட்டருளினார். அவன் மனைவி ரெபேக்காள் கர்ப்பந்தரித்தாள்.

**ஆதி. 29 : 31 கூறுகிறது :**

லேயாய் அற்பமாய் எண்ணப்பட்டாள் என்று கர்த்தர் கண்டு, அவள் கர்ப்பந்தரிக்கும்படி செய்தார்.

**நியாதி. 13 : 24 கூறுகிறது,**

மனோவா மனைவி ஒரு குமாரனைப் பெற்று, அவனுக்கு சிம்சோன் என்று பேரிட்டாள். அந்தப் பிள்ளை வளர்ந்தது. கர்த்தர் அவனை ஆசீர்வதித்தார்.

**லூக்கா 1 : 57 கூறுகிறது,**

எலிசபெத்துக்குப் பிரசவகாலம் நிறைவேறினபோது, அவள் ஒரு புத்திரனைப் பெற்றாள் – என்பதாக.

ஆம், மலடியாயிருந்த, பிள்ளையில்லாதிருந்த வயது சென்ற எலிசபெத், சகரியா ஒரு புத்திரனைப் பெற்றார்கள். இன்றைய செய்தி என்ன என ஆவலோடு எதிர்பார்க்கும் எனக்கு அன்பான சகோதரனே, சகோதரியே,

நீயும் ஒரு ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ளப் போகிறாய். சபையில் ஆத்துமாக்கள் இல்லையே என்ற மலட்டுத்தன்மையா ? பணம் இல்லையே என்ற மலட்டுத்தன்மையா ? வேலை இல்லை என்ற மலட்டுத்தன்மையா ? வெளிநாட்டுப் பிரயாணம் வாய்க்கவில்லையே என்ற மலட்டுத்தன்மையா ? எல்லா வாசலும் அடைக்கப்பட்டுள்ளதே என்ற மலட்டுத்தன்மையா ? வயது சென்றுவிட்டதே, காலம் கடந்து விட்டதே என்ற கவலையா ? பயப்பட வேண்டாம்.

லூக். 1 : 14 கூறுகிறது,

**உனக்கு சந்தோஷமும் மகிழ்ச்சியும் உண்டாகும். –** ஆமென்.